Public Service Announcement

முன்கூட்டிய வாக்களிப்பிற்கான தொலைநிலைப் பதிவுக்கு இன்று கடைசி நாள்

வாகன், ஒன் (அக்டோபர் 15, 2026) – 2026ஆம் ஆண்டு நகராட்சித் தேர்தலில் ஆன்லைனில் வாக்களிப்பதற்காகத் தொலைநிலையில் பதிவு செய்ய, வாக்களிக்கத் தகுதியுள்ள வாகன் வாக்காளர்களுக்கு இன்று கடைசி நாளாகும்!

பதிவு செய்தவுடன், உங்களுக்கு ஒரு PIN எண் வழங்கப்படும். அதைப் பயன்படுத்தி, **அக்டோபர் 18, ஞாயிற்றுக்கிழமை இரவு 11:59 மணியுடன்** முடிவடையும் முன்கூட்டிய வாக்களிப்புக் காலப்பகுதியில் ஆன்லைனில் உங்கள் வாக்கைப் பதிவு செய்யலாம்.

இன்றைய தினத்திற்குப் பிறகும், அக்டோபர் 18, ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணி வரை வாக்காளர் உதவி மையத்திற்குச் சென்று, ஆன்லைனில் வாக்களிப்பிற்காகப் பதிவு செய்துகொள்ளலாம். Promenade Mall அமைந்துள்ள மையம் மாலை 6 மணிக்கு மூடப்படும் என்பதை நினைவில் கொள்ளவும்.

வாக்காளர் உதவி மையங்கள்:

- **வாகன் நகர மண்டபம்** (2141 Major Mackenzie Dr.)
  - அக்டோபர் 15 முதல் 18 வரை, காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை.
- **Al Palladini சமூக மையம்** (9201 Islington Ave.)
  - அக்டோபர் 15 முதல் 18 வரை, காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை.
- வேலூர் வில்லேஜ் சமூக மையம் (1 Villa Royale Ave.)
  - அக்டோபர் 15 முதல் 18 வரை, காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை.
- வடக்கு தோர்ன்ஹில் சமூக மையம் (300 Pleasant Ridge Ave.)
  - அக்டோபர் 15 முதல் 18 வரை, காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை.
- **Promenade Mall** (1 Promenade Cir.)
  - அக்டோபர் 15 முதல் 16 வரை, காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை.
  - அக்டோபர் 17, காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை.

- அக்டோபர் 18, காலை 11 மணி முதல் மாலை 6 மணி வரை.

ஆன்லைனில் வாக்களிப்பிற்குப் பதிவு செய்வதற்கு முன்பு, வாக்காளர்கள் **ஏற்கனவே வாக்காளர் பட்டியலில்இடம்பெற்றிருக்க வேண்டும்.** வாக்காளர் பட்டியலில் உங்கள் பதிவின் நிலையைச் சரிபார்க்க அல்லது வாக்காளர் பட்டியலில் இடம்பெற, voterregistration.vaughan.ca என்ற இணையதளத்தைப் பார்வையிடவும்.

தாமதிக்க வேண்டாம் – இன்றே பதிவு செய்யுங்கள். பதிவு செய்வதில் உதவி தேவையா? இந்தக் காணொளியைப்பாருங்கள்!

இணையவழியில் வாக்களிக்க மூன்று வழிகள்
பதிவு செய்த பிறகு, தகுதியுள்ள வாக்காளர்கள் பின்வரும் வழிகளில் தங்கள் வாக்கைப் பதிவு செய்யலாம்:

- கைப்பேசி, டேப்லெட் அல்லது கணினியைப் பயன்படுத்தி.
- வழக்கமான வேலை நேரங்களில் வாகன் பொது நூலக வளாகத்தில் உள்ள இணையவழி வாக்களிப்பு கியோஸ்க் மூலம்.
- வாக்காளர் உதவி மையத்தில் உதவியுடன்.

ஆன்லைனில் வாக்களிப்பது எப்படி என்பதை அறிந்துகொள்ள இந்தக் காணொளியைப் பாருங்கள்.

வாக்களிப்பு நாள்
அக்டோபர் 26, திங்கட்கிழமை வாக்களிப்பு நாள் ஆகும். வாக்காளர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வாக்களிப்பு மையத்தில் நேரில் சென்று தங்கள் வாக்கைப் பதிவு செய்யலாம். வாக்களிக்கத் தகுதியுள்ள அனைத்து வாகன் வாக்காளர்களுக்கும், அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட வாக்களிப்பு மையம் குறித்த விவரங்களுடன் தனிப்பட்ட அறிவிப்பு அனுப்பப்படும்.

உங்களுக்கு ஒதுக்கப்பட்ட வாக்களிப்பு மையத்தின் விவரங்கள் அடங்கிய வாக்காளர் தகவல் அட்டை அஞ்சல் மூலம் கிடைத்திருக்க வேண்டும். வாக்காளர் தகவல் அட்டை கிடைக்கவில்லை என்றால், elections@vaughan.ca என்ற மின்னஞ்சல் முகவரி அல்லது, 905-832-2281 என்ற தொலைபேசி எண்ணின் மூலம் Elections Vaughan அமைப்பைத் தொடர்புகொள்ளவும் அல்லது உங்கள் **வாக்களிப்பு மையத்தை ஆன்லைனில்**கண்டறியவும்.

கேள்விகள் உள்ளனவா? Elections Vaughan அமைப்பை elections@vaughan.ca என்ற மின்னஞ்சல் முகவரியில் அல்லது 905-832-2281 என்ற தொலைபேசி எண்ணில்

Public Service Announcement

தொடர்புகொள்ளவும் அல்லது vaughan.ca/**elections** என்ற இணையதளத்தைப் பார்வையிடவும்.

உடனுக்குடன் வெளியாகும் அறிவிப்புகள் மற்றும் செய்திகளைப் பெற, Vaughan News-க்குச் சந்தா செலுத்தி, X, Facebook, Instagram மற்றும் LinkedIn ஆகிய அதிகாரபூர்வ நிறுவனச் சமூக ஊடகப் பக்கங்களைப் பின்தொடரவும்.

இந்தப் பொதுச் சேவை அறிவிப்பை கீழ்க்காணும் மொழிகளில் வாசிக்கவும்

- காண்டோனீஸ்
- பார்சி
- எபிரேயம்
- ஹிந்தி
- இத்தாலிய மொழி
- மாண்டரின்
- ரஷ்ய மொழி
- ஸ்பானிய மொழி
- டேகலாக்
- தமிழ்
- உருது
- வியட்நாமிய மொழி

-30-

வாகனைப் பற்றி: வாகன் நகரம் கனடாவின் மிகவும் வேகமாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றாகும், இதன் மக்கள் தொகை 344,412 ஆக உள்ளது. 1991-இல் இணைக்கப்பட்ட வாகன், கான்கார்ட், க்ளீன்பர்க், மேப்பிள், தோர்ன்ஹில் மற்றும் வுட்பிரிட்ஜ் சமூகங்களை உள்ளடக்கியது. இந்தக் கலாச்சார ரீதியாகப் பன்முகத்தன்மை கொண்ட நகரம், யார்க் பிராந்தியம் மற்றும் கிரேட்டர் டொராண்டோ பகுதியின் மையத்தில் அமைந்துள்ளது.

ஊடக தொடர்புக்கு: வாகன் நகரம்
தொடர்புகள், சந்தைப்படுத்தல் மற்றும் ஈடுபாட்டுத் துறை
905-832-2281 | corpcomm@vaughan.ca